# கொழும்பு பல்கலைக்கழகம் திடீரென மூடப்பட்டது! மாணவர்களை உடன் வெளியேறுமாறும் உத்தரவு!!

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரை கால வரையின்றி மூடப்பட்டுள்ளதாக அரசு நேற்று அறிவித்தது மாணவர்களின் அமைதி

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 30 இதழ் 91

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 12 — 05 — 199

## பிரதேச ரீதியில் தமிழர் வலிமை மிக்கவர்

தொண்டா

(கொழும்பு)

"தமிழ் மக்கள் இலங்கையைப் பொறுத்தவரையில் சிறுபான்மையினராக இருக்கலாம். ஆனால் பிரதேச ரீதியில் பார்த்தால் எமது வலிமை எத்தகையது என்பது புரியும்"

(4-ம் பக்கம் பார்க்க)

## முத்துகல வன்செயலலில் 92 தமிழர் படுகொலை

(மட்டுநகர்)

மட்டக்களப்பு முத்துகல பகுதியில் முஸ்லிம்களால் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை 92ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 29ம் திகதி முத்துகல பகுதிக்குள் புகுந்த முஸ்லிம்கள் தமிழரை

(4ம் பக்கம் பார்க்க)

ஆனையிறவில் புலிகள் மின்வேக அதிரடி

# 22 காவலரண் முற்றாக அழிப்பு

# 15 இராணுவத்தினர் உயிரிழப்பு

## இராணுவ சடலங்களும் ஆயுதங்களும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு தட்டுவன்கொட்டி பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளின் சார்ள்ஸ் அன்ரனி சிறப்பு படையணியும் கிளிநொச்சி தாக்குதல் பிரிவும் இணைந்து நடத்திய முப்பது நிமிட அதிரடித் தாக்குதலில் 22 காவலரண்கள் புலிகளால் தகர்க்கப்பட்டன. 15 ற்கும் மேற்பட்ட படையினர் பலியானார்கள். பலர் காயமடைந்த நிலையில் முகாம்களுக்கு தப்பியோடினார்கள் பெருமளவு ஆயுதங்களும், 3 இராணுவ சடலங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன

நேற்று அதிகாலை 2மணியளவில் இக்காவலரண்களைச் சுற்றிவளைத்த விடுதலைப்புலிகள் திடீர் அதிரடித் தாக்குதலைத் தொடுத்தனர். புலிகளின் இத்திடீர் நடவடிக்கையால் நிலைகுலைந்த படையினர் செய்வதறியாது முகாம் பகுதியை நோக்கி ஓட்டமெடுத்தனர் இத்தாக்குதலின்போது

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு சுவிஸ் பிரஜை ஆயுதம் கொண்டுவந்தாரா?

(கொழும்பு)

அண்மையில் சுவிஸ் பிரஜை ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட வெடிமருந்துகளும் ஆயுதங்களும் புலிகளுக்காக கொண்டு வரப்பட்டவையா என்பது பற்றி பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கொழும்பிலுள்ள பொலிஸ் விசேட நடவடிக்கை பணியகம் இதுபற்றி மேலும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக டோக்கியோவிலுள்ள இன்ரர்போல் தொடர்பு நிலையத்தினூடாக சுவிற்லாந்திற்கு தகவல் கோரி நேற்று ரெலக்ஸ் செய்தி அனுப்பியுள்ளது.

40 வயதுடைய திடகாத்திரமுள்ள முன்னாள் சுவிஸ் சுங்க அதிகாரியான சுவிஸ்பிரஜையின் உடம்பில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன. இவரிடமிருந்து புலியின் தலையுடைய பற்றித் துணி ஒன்றும் மீட்கப்பட்டது.

## "யாழ்.ஆயர் தமிழ் மக்களுக்கு சிறந்த தொண்டாற்றியவர்"

கொழும்பு பேராயர்

(யாழ்ப்பாணம்)

"யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை தமிழ் மக்களுக்கும் சிறந்த தொண்டாற்றியவர். இலங்கை கத்தோலிக்க சமயத்துக்கும் கத்தோலிக்க சமய ஆயர் உயர்குழுவின் நன்மதிப்பைப் பெற்றவர்"

இவ்வாறு இலங்கை கத்தோலிக்க ஆயர் அவைத்தலைவரும், கொழும்பு அதிமேற்றாணியாருமானபேரருள் திரு. நீக்கிலாஸ் மார்க்கஸ் பெர்ணண்டோ கூறினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## "மண்ணையும் மக்களையும் நேசித்தவர்" - யோகி

(யாழ்ப்பாணம்)

"மண்ணையும், மக்களையும் கூடுதலாக நேசித்தார், யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை.

இந்திய அரசும், இலங்கை அரசும் தமிழ் மக்கள் மீது அழிவுகளை ஏற்படுத்திய காலங்களில் இந்த மண்ணை விட்டு ஓடாது, மனஉறுதியுடன் இருந்து தமிழ் மக்களுக்கு சேவையாற்றிய யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு தமிழ்இனம் என்றும் கடமைப்பட்டுள்ளது."

இவ்வாறு யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பெரும் வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு

[4ம் பக்கம் பார்க்க]

## எழுதுவினைஞருக்கு 18முதல் நியமனம்

[யாழ்ப்பாணம்]

எழுது வினைஞர்களாக அண்மையில் தெரிவு செய்யப்பட்ட 304 பேரில் 83 பேருக்கு எதிர் வரும் 18-ம் திகதி முதல் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களில் 11 பேர் யாழ். கச்சேரியிலும், 48 பேர் கல்வி இலாகாவிலும் 24 பேர் சுகாதாரத் திணைக்களத்திலும் சேவையாற்றுவார்கள் என்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

## தமிழக முரசொலி ஆசிரியர் கைது செய்யப்பட்டு விடுதலை

(சென்னை)

முரசொலி பத்திரிகை ஆசிரியர் எஸ். செல்வம் சட்டப் பேரவை உரிமை மீறலுக்காக நேற்று கைது செய்யப்பட்டு $2\frac{1}{2}$ மணித்தியாலத்தின் பின்னர்விடுதலை செய்யப்பட்டார், அடுத்த கூட்டத்தொடரின் 4வது நாள், பேரவையில்தான் ஆஜராவார் என்று பேரவைத் தலைவருக்கு அளித்த வாக்குமூலத்தின்பேரிலேயே அவர் விடுதலையானார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## "சிறுபான்மையினரின் பிரச்னைகள் தீராவிட்டால் நாடு துண்டாடப்படும்" ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

"இந்நாட்டில் வாழும் சிறுபான்மை இனமக்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றாத பட்சத்தில் இந்நாடு துண்டாடப் படவேண்டிய இக்கட்டான நிலை ஏற்படும்".

அட்டாளைச்சேனையில் அண்மையில் நடைபெற்ற கல்விக் கல்லூரி திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: பெரும்பான்மையினரான நாம் இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினரின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதன் மூலமே இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை கட்டியெழுப்ப முடியுமென்றும்

(4ம் பக்கம் பார்க்க)

## பதற்றத்தை தீர்க்க நடவடிக்கை

(புதுடில்லி)

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கும், நீதித்துறைக்கும் ஏற்பட்ட மோதலால் உருவாகியுள்ள பதற்ற நிலையைக் குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும், என்று

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**மீரா பிரசுரங்கள்**

கற்பனையின் இனிய கனவுகளன்று காலத்தை பிரதிபலிக்கும் கதைகள், சமுதாயப் பிடிப்புள்ள கதைகள் யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி, வல்வெட்டித்துறை, கிளிநொச்சி புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது.

[சி-6287]

**வெளிவந்துவிட்டது**

சமூகக்கல்வி ஆண்டு 7 துரித மீட்டலுக்கான வினாவிடை. ஆக்கம்: க. சந்திரசேகரம் வெளியீடு:- சோதி வெளியீட்டு வாரியம் ஏகவிநியோகஸ்தர்கள்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை 234, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். விலை 20/- மட்டுமே. சி-2121)

**வைத்திய சேவை**

வியர்வைப் பருக்கள், முகப் பருக்கள், சதை வளர்ச்சி, தலைமயிர் வளர, கழலைக்கட்டி, தலைமயிர் நரை மாறுவதற்கு, வாதம், நரம்புத் தளர்ச்சி, தேமல், வெண்குஷ்டம், மாதவிலக்குக் கோளாறுகள், செய்வினை, சூனியம், பிணிதோஷம் போன்ற வியாதிகளுக்கும் மெஞ்ஞான ஆலோசனையுடன் நுண்ணியல் மருத்துவம். வேளாங்கண்ணி வைத்தியர், எம். கருணாதரன், வேளாங்கண்ணி வைத்தியசாலை, 616, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (சி6271)

**சங்கீதம் வினாவிடை**

தயாரிப்பு ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா ஆண்டுகள் 6, 7, 8, 9 மற்றும் வட இலங்கைச் சங்கீத சபையின் தரம் 2 பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியது. வெளியிட்டோர்: நடுவுத்துருத்தி, நல்லூர்ச்சந்தை, கிடைக்குமிடம்: ஸ்ரீ காந்தா புத்தகசாலை 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6285)

**தவறிவிட்டது**

செ. சிவசந்திரபோஸ், திருமதி தேவரஞ்சிதமலர் கலட்டி பண்டத்தரிப்பு என்ற முகவரியுடைய காங்கேசன்துறை மக்கள் வங்கி பாஸ் புத்தகம் இல. 12244 கடந்த 8ம் திகதியன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பண்டத்தரிப்பு பிரதான வீதியிலுள்ள யாழினி கபேயில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-6289)


## வருடாந்த உற்சவம்

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை கிழக்கு அருள்மிகு ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த மாதம் 27 ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் விசேட அபிஷேகம், பூசை வழிபாடு ஆராதனைகளுடன் இடம்பெற்று வருகிறது.

இன்று 12-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 108 சங்காபிஷேகமும், அம்பாள் வீதி வலம் வருதலும், அன்னதானமும் நடைபெறும் (154)

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

அகதிகள் புனர்வாழ்வுக்கழகமும், சுகாதாரத் திணைக்களமும் நடாத்தும் போயாதின கருத்தரங்கில் 'இருதய வியாதி நோய் பரம்பல்' பற்றி டாக்டர் தெய்வேந்திரம் கருத்துரை வழங்க இருக்கிறார்.

இக்கலந்துரையாடல் 16ம் திகதி காலை 9 மணிக்கு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும். [சு]

## பண்டத்தரிப்பில் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தென்னை பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது.

தற்போது இச்சங்கத்தின் எட்டு கவறணைகளிலும் தினமும் விற்பனையாகாது பெருமளவு கள் தேங்கிக்கிடப்பதாகவும் இவற்றை நல்லமுறையில் பயன்படுத்த கூடிய முறையில் போத்தலில் கள்ளை விஞ்ஞான முறைப்படி அடைத்துச் சேமித்து வைத்து கள் தட்டுப்பாடாக இருக்கும் காலங்களில் சந்தைபடுத்தக்கூடியதாக இத்தொழிற்சாலை அமையுமென்று சங்க பொதுமுகாமையாளர் இதுபற்றி தெரிவித்தார் (72)


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### M. P. K. கந்தசாமி

(தபால் அதிபர்)

**தோற்றம்:** 29-03-1935 **மறைவு:** 13-04-1992

சங்கானை கிழக்கு பண்டத்தரிப்பை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் திரு. திருமதி M. P. கணபதிப்பிள்ளை பொன்னம்மா அவர்களின் ஏக புதல்வனும், திரு. திருமதி நல்லையா சின்னம்மாவின் மருமகனுமாகிய M. P. K. கந்தசாமி [தபால் அதிபர்] அவர்களின் அந்தியேட்டி அழைப்பு

எதிர்வரும் ஆங்கிரச வருடம் சித்திரைத் திங்கள் 31-ம் நாள் [13-05-92] புதன்கிழமை நண்பகல் திருவாளர் M. P. K. கந்தசாமி அவர்களின் ஆன்ம ஈடேற்ற அந்தியேட்டிக்கிரியைகள் யாவும் ஒழுங்குமுறைப்படி அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அவவேளை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் பங்குகொள்ளுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

#### நினைவஞ்சலி

எந்நாளும் நாம் வணங்கும் தெய்வம் நீயே
இவ்வுலகில் நீயென்றும் உதவியென நினைந்து
வாழ்ந்தோம்
ஈங்கிதனில் யார் எமக்குத் தலைமை காண்பார்
அண்ணா
முடிசூடா மன்னனுனையிழந்தோம் அத்தான்
உம்மை நாம் பிரிந்தினி எவ்வாறு வாழ்வோம்
இங்கே,
உள்ளன்பே யென்றென்றும் காட்டி யெம்மை
பரிவதனில் வழி நடத்தப் பற்று வைத்தாய்
பிரிவாற்றுத் துயர்துடைக்க யார் தானுண்டு
புழுங்குதே மனம் வேகுதே சித்தம் கலங்குதே
தெய்வமே.

இங்ஙனம்:

மனைவி: திருமதி க. இராசம்மா,
பிள்ளைகள்: ஜெடசீலன், ஜெயவதனா, ஜெகதீசன், சுரேந்திரன், சுமதி, கலீச்சான், கங்கா,
சகோதரர்கள்: ந. பரமேஸ்வரி, க. சந்திரசேகரம், க. நாகேஸ்வரி, ம. மகேஸ்வரி, அமரர். க. சுப்பிரமணியம், தே. லிங்கேஸ்வரி, க. காந்தராசா, க. பொன்னம்பலம், அ. புவனேஸ்வரி.
மைத்துனர் மைத்துனி: பொ. நல்லையா, பொ கணேசரத்தினம், பொ. மகாதேவன், ந தேவராசா, ந. அருச்சுனன். ந. சிவபாலன், ந. வரதராசா, ச. தவமணிதேவி, சு. அன்னபாக்கியம் கா. இராணி, பொ. இராசமலர், நாகராசா நாகேஸ்வரி.

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு. (சி 6283)


## பரிசளிப்பு விழா

(வட்டுக்கோட்டை)

யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை பரிசளிப்புவிழா கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் திரு. த. அழகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக யாழ். கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி வேலாயுதம் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், கொத்தணி அதிபர் திரு. இ. மகேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். [139]

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் இவ்வருடத்திற்கான வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் நடைபெற இருப்பதால் இப்பிரிவில்வசிப்போரும், இப்பிரிவில் இருந்து இடம்பெயர்ந்தோரும் மெய்வல்லுனர் போட்டிகளுக்கு தனிப்பட்ட முறையிலும், குழு நிலைப் போட்டிகளுக்கு இப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களும் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி விண்ணப்பம் சம்பந்தமான விபரங்களை பிரிவுக் காரியாலயத்தில் பெற்று இம்மாதம் 25 ந் திகதிக்கு முன்னதாக ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


## உப்புக் கூட்டுத்தாபனம் மக்கள்மயமாக்கப்பட்டது

இலங்கை தேசிய உப்புக்கூட்டுத்தாபனம் ''லங்கா சோல்ட் லிமிட்டெட்'' என மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு இணங்கவும் வடபிராந்தியத்தில் உள்ள ஆனையிறவு குறிஞ்சாத்தீவு உபபளங்கள் 1990 ஆடி முதல் இயங்காமல் இருப்பதாலும், உடனடியாக அவற்றை இயங்கவைக்கும் சாத்தியங்கள் இல்லாமையாலும் 1992 ஜனவரி முதல் சம்பளங்கள் வழங்குவதில் தடங்கல்கள் இருப்பதாலும் வடபிராந்தியத்தில் உள்ள ஊழியர்கள் புதுமுல்ல அறிக்கையின் பிரகாரம் சுயவிருப்பத்தின் அடிப்படையில் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுக்கொள்ளலாம் என தலைமை அலுவலகத்தில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு வடபிராந்திய ஊழியர்களையும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் 19-5-92 பளை, 20-5-92 முரசுமோட்டை அலுவலகங்களில் காலை 10-00 மணிக்கு ஒன்றுகூடும்படி வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதுவரை ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளாதவர்கட்கும், இச்சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய முகாமையாளர்
**வட பிராந்திய**
**உப்புக் கூட்டுத்தாபனம்**
ஆனையிறவு. [எ-2133]

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



### ★ செல்வன் யுதர்சன் ★

புளியங்கூடல் தெற்கைச் சேர்ந்த யுவராசா கலைமகள் தம்பதிகளின் செல்வப்புதல்வன் யுதர்சன் [யுதன்] இன்று [12-05-92] இரண்டாவது பிறந்த தினத்தை திருநெல்வேலியில் தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, நதியா அக்கா, தங்கை யுதர்சிகா, பெரியசாமியின் பிள்ளைகள், மயூரா அக்கா. தங்கை பயாழினி மற்றும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், சித்திமார் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் அம்பாள் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

'அம்பாள் உணவகம்'
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. [சி 6235]

# மண் மீட்புநிதி கடன் பத்திர சரியான இலக்கம்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பிற்காகத் தேர்வு செய்யப்பட்ட கடன் பத்திரதாரரின் தொடர்பு இலக்கங்களில் இம்மாதம் 8ம் 9ம் திகதிகளில் ஈழநாடுவில் வெளியான இலக்கங்களில் சில தெளிவின்றி அச்சிடப்பட்டுள்ளன. சரியான இலக்கங்கள் வருமாறு:

யா/யா/178, யா/யா/195 கி/ப/367, யா/வெ/1037

இம்மாதம் 7-ம் திகதி வெளியான இலக்கங்களில் ஒன்று பிழையாகவும், ஒன்று தெளிவின்றியும் உள்ளன. சரியான இலக்கம் யா/தெ/2598, (தவறாக அச்சிடப்பட்டது. யா/தெ/2298.) சரியான இலக்கம் யா/பரு/1536.

# பாவனைக்கு உதவாத இறைச்சி புதைக்கப்பட்டது

(பண்டத்தரிப்பு)

சங்கானையிலுள்ள இறைச்சிக் கடையொன்றில் திடீர்பரிசோதனை மேற்கொண்ட சுகாதார அதிகாரிகளால் பாவனைக்கு உதவாத பழுதடைந்த இறைச்சி விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமையன்று பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகரினால் கைப்பற்றப்பட்ட இந்த இறைச்சி மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியினால் பரிசோதிக்கப்பட்டு மக்கள் பாவனைக்குதவாது என்று கண்டறியப்பட்டதை அடுத்து இறைச்சி முழுவதும் புதைக்கப்பட்டது. (71)

# அமெரிக்க தூதரகம் முன் புதுடில்லியில் ஆர்ப்பாட்டம்

(புதுடில்லி)

புதுடில்லியில் அமெரிக்க தூதுவராலயத்திற்குமுன்பாக பெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான ஏவுகணை வர்த்தகம் பூர்த்தி செய்யப்படுமானால் இந்தியாவுக்கு எதிராக தடைகள் விதிக்கப்படுமென அமெரிக்கா விடுத்த அச்சுறுத்தல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தியாவுக்கு ஏவுகணைகளை விற்பனை செய்வதற்கான 25 கோடி டொலர் ஒப்பந்தத்தை ரஷ்யா நிறைவேற்றுமானால் அந்த இரண்டு நாடுகளுக்கும் எதிராக வர்த்தக தடைகள் விதிக்கப்படுமென அமெரிக்கா இந்த வார தொடக்கத்தில் எச்சரிக்கை செய்திருந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# பாலர் பாடசாலை விபரம் திரட்டப்படுகிறது

[சித்தன்கேணி]

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தனியார் பாலர் பாடசாலைகளின் விபரங்கள் திரட்டப்படுகின்றன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் செல்வி றாயினி கனகரத்தினம் சகல கிராம உத்தியோகத்தர்களையும் தத்தமது பிரிவிலுள்ள தனியார் பாலர் பாடசாலைகளின் விபரங்களையும் திரட்டித்தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்

பாலர் பாடசாலைகளின் விபரங்களைத் திரட்டும்போது முன்னுரிமை அடிப்படையில் பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்களின் தொகை, வசதிகள், ஆசிரியர்களின் விபரம், முகாமைத்துவம் செய்யப்படும் நிறுவனம் ஆகியவற்றின் விபரங்களையும் திரட்டுமாறு குறிப்பிட்டுள்ளது.

பிரதேசசபையின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாலர் பாடசாலைகளின் விபரங்களே திரட்டப்படவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது (137)

# தொழுநோய் சிகிச்சை நிலையம் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

புங்குடுதீவு அரசினர் வைத்திரசாலையில் முன்னர் நடைபெற்றுவந்த தொழுநோய் சிகிச்சை நிலையம் கெற்பலி அகதிகள் முகாமுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தீவகப் பகுதிகளை சேர்ந்த பெருந்தொகையான மக்கள் கெற்பலி அகதிகள் முகாமில் தங்கியிருப்பதால் அங்கு இந்த இடம் பெயர்ந்து வந்து சிகிச்சை நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும், மாதத்தில் 4 ஆவது செவ்வாய்க்கிழமைகளில் முற்பகல் நேரத்தில் இந்த சிகிச்சை நிலையம் செயற்பட ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது (72)

# வாழைநார் பட்டு பயிற்சி

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கீழ் உள்ள வாழை நார்ப்பட்டு கைத்தொழில் பயிற்சி நிலையத்தில் இயங்கி வரும் ஆசிரிய பயிற்சிப் பாடசாலையில் விரைவில் மீண்டும் புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

இவ்வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற விரும்புவோர் நிலைய இயக்குநரோடு தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. [154]

# இலங்கையில் விக்டோரியா அணையை கட்ட உதவிய பிரி. சபாநாயகர் பூத்ரோய்

(லண்டன்)

பிரிட்டிஷ் நடாளுமன்றத்தில் தற்போது முதலாவது பெண் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திருமதி பெட்டி பூத்ரோய், இலங்கையுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு உடையவர்.

இவருடைய விடாமுயற்சியினால்தான் இலங்கையிலுள்ள விக்டோறியா நீர்த்தேக்கம் கட்டப்பட்டது.

பல வருடங்களுக்கு முன் பிரிட்டனில் தொழிற் கட்சி ஆட்சியில் இருக்கும் போது தான் இலங்கையில் விக்டோறியா நீர்த்தேக்கம் கட்டப்பட்டது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திருமதி பெட்டி பூத்துரோய், மேற்படி நீர்த்தேக்கம் கட்டப்படும்போது, பொறுப்பாகவும் கண்ணியத்துடனும் கடமையாற்றியவர்.

இதன் பின்பு திருமதி தட்சர் ஆட்சிக்கு வந்த பின்பும், திருமதி பெட்டி எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்து, விக்டோறியா நீர்த்தேக்கம் முற்றுப்பெறும் வரை, பிரிட்டிஷ் நாடளுமன்றத்தில் குரல் எழுப்பி வெற்றியும் கண்டவர்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திருமதி பெட்டி பூத்ரோய், சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலேயே கூடுதலாக பாடுபடுவேன் எனக் கூறியுள்ளார்.

உள்நாட்டுப் போரினால் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கும் இலங்கை பற்றி மேற்குலக நாடுகளில் கடந்த காலங்களில் சூடுபிடிக்காவிட்டாலும் வருங்காலத்தில் திருமதி பெட்டி பூத்துரோயாலும், பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் முதல்தடவையாக தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள, இலங்கையரான திரு. நிரஞ்சன் தேவாவின் மூலமாகவும் தெரியவரக்கூடுமென, அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

திரு. நிரஞ்சன் தேவா தனது கன்னிப்பேச்சில் இலங்கை பற்றியும் குறிப்பிட்டிருந்தார். (வி)

# காணாமல்போனநகைகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படுகிறது

(வவனியா)

வவுனியாவில் கடந்த 1990ம் ஜூன் மாதம் இடம்பெற்ற கலவரங்களின்போது உரிமையாளரிடம் ஒப்படைப்பதற்காக கொண்டுவரப்பட்டு காணாமல்போன நகைகளுக்கான நட்டஈடு வழங்கப்பட்டு வருவதாக வவுனியா கிளையின் மக்கள் வங்கி முகாமையாளர் கே. தவராஜசிங்கம் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்: ஒருபவுணுக்கு 4,600 ரூபா அதாவது ஒருகிராமுக்கு 525 ரூபா வீதம் வழங்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த புதன்கிழமை தொடக்கம் நகை அடைவு பிடிக்கும் வேலைகளும் வவுனியா மக்கள் வங்கியில் நடைபெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

வடக்குக் - கிழக்கில

# எழுதுவினைஞர் பதவிக்கு 245 வெற்றிடங்கள்

(கொழும்புத்துறை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எழுதுவினைஞர் பதவிக்கு 245 வெற்றிடங்கள் உள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக உள்ள இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நிர்வாகத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (154)

# ராஜீவ் யாத்திரை புதுடில்லியில் ஆரம்பம்

(புதுடில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு தினத்தை புதுடில்லியிலிருந்து சிறிபெரும்புதூருக்கு ராஜீவ்காந்தி யாத்திரை தொடங்கியது.

7 முதலாவது நினைவு நாளையொட்டி ஆரம்பமாகும் இந்த யாத்திரை இளைஞர் காங்கிரஸினால் ஏற்பாடுசெய்யப்பட்டது.

இந்தயாத்திரை ஹரியானா, உத்தரப்பிரதேசம், மகாராஸ்ரம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் வழியாக 2,800 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து சிறிபெரும்புதூரை 21ம் திகதி வந்தடையும் என தெரிவிக்கப்பட்டது. (கே

# கொள்ளை

[கொழும்புத்துறை]

கொடிகாமத்திலுள்ள கடை ஒன்றில் அண்மையில் சுமார் முப்பது ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்த விபரம்பற்றித் தமிழீழக் காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

# பனை வள பயிற்சி நிலையப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம் குடத்தனை ஸ்ரீபரம் பனைவள பயிற்சிநிலையத்தில் பயிற்சியாளர்களுக்கிடையில் போட்டிகள் நடாத்தி பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன இப்போட்டிகளில் 42 பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.

நெஞ்சணைத்துப் பனையேறும் போட்டியில் 70 அடி உயரத்தை 14.51 செக்கன்களில் ஏறிமுடித்த சி. சேதீஸ்வரன் முதலாமிடத்தையும், கயிற்றில் நடந்து பனையேறும் போட்டியில் 12 செக்கன்களில் கடந்த சி முருகதாஸ் முதலாமிடத்தினையும் பெற்றுள்ளனர்.

பயிற்சிக் காலத்தில் கூடுதல் உற்பத்தியை மேற்கொண்ட வி. இராஜேஸ் கண்ணன் சிறந்த பயிற்சியாளர்களுக்கான பரிசினைப் பெற்றுக் கொண்டார். சிறந்த சேவையாற்றிய போதனாசிரியர் திரு. ஆ. அன்னலிங்கத்துக்கு பரிசில் வழங்கப்பட்டது.

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன் கோவிலில் நடைபெற்று வரும் லட்சார்சனை நிகழ்ச்சியில் இன்று மாலை 6 மணிக்கு புலவர் ஈழத்துச் சிவானந்தனின் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறும்.

# வணக்க மாத ஆராதனை

[ஊர்காவற்றுறை]

யாழ் அடைக்கலநாயகி ஆலயத்தில் தினமும் மாலை ஆராதனை அருட்திரு. சந்திரபோஸ் அடிகளால் நடாத்தப்பெற்றுவருகிறது.

இவ்வணக்க மாத ஆராதனைகள் இம்மாதம் 31ம் திகதியுடன் நிறைவுபெறுகிறது. [59]

# உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு நடாத்தி வரும் உதைபந்தாட்டப்போட்டியின் 2-ம் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டம்:

பாஷையூர்சென் அன்ரனீஸ் அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தா அணி மோதும். இப்போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக் கழகத்தின் 1-ம் வருட நிறைவையொட்டி நடாத்தப்படும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்:

றேயல் (ஏ) எதிர் பன்னாலை கணேசன் (பி). ஜெற்லைனஸ் எதிர் தொழில்நுட்பக் கல்லூரி. இப்போட்டி யாழ். தொழில்நுட்பக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலையில் பொலிஸ் முகாம்

# கல்விகற்கமுடியாது மாணவர்கள் அவதி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள வீரமுனைக்கிராமத்தில் மீளக்குடியேறிய தமிழர்களின் குழந்தைகள் கல்வி கற்பதற்கு பாடசாலையில்லாமல் அவதியுறுகின்றனர்.

இக்கிராமத்திலுள்ள பாடசாலையில் பொலிஸார் முகாமிட்டுள்ளதால் பாடசாலை இயங்கமுடியாத நிலையிலுள்ளது.

இப்பகுதியில் 150 குடும்பங்கள் தற்போது குடியமர்த்தப்பட்டுள்ளன. மேலும் 372குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ரி)

# கிரிக்கெட்: அமெரிக்ககோஷ்டி வெற்றிபெற்றது

(கொழும்பு)

இலங்கைக்கு சிநேகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்துள்ள அமெரிக்க கிரிக்கெட்கோஷ்டி முதல் போட்டியில் இலங்கையை தோற்கடித்துள்ளது.

மேற்படி இரு கோஷ்டிகளுக்குமிடையில் கடந்த வாரம் கொழும்பு எஸ். எஸ். ஸி. மைதானத்தில் நடைபெற்ற 25 ஓவர் கிரிக்கெட் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய அமெரிக்கா 25 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது.

[4ம் பக்கம் பார்க்க]

## சட்டவிரோதமாகத் தங்கி தாய்லாந்தில் தொழில்புரியும் வெளிநாட்டவரை வெளியேற்ற உத்தரவு

(மணிலா)
தாய்வானில் சட்டவிரோதமாகத்தங்கி தொழில்புரிந்து வரும் வெளிநாட்டவர்கள் மீது தாய்வான் அரசு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கென புதிய சட்டங்களையும் தாய்வான் அரசு நேற்றுமுதல் அமுல்படுத்தியுள்ளது; சட்ட விரோதமாக தாய்வானில் தொழில் பார்க்கும் வெளிநாட்டவர்களை பொலிஸார் உடனடியாகக் கைதுசெய்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற தாய்வான் அரசு உத்தரவிட்டுள்ளது இவர்கள் தாய்வானை விட்டு வெளியேற 10 நாட்கள் அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை மூவாயிரம் பேர் வரையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர், முப்பதாயிரத்துக்கு நாற்பதாயிரத்துக்கும் இடைப்பட்ட வெளிநாட்டவர்கள் தாய்வானில் சட்ட விரோதமாக தங்கி தொழில் புரிவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, பிலிப்பைன்ஸ் மலேஷியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே தாய்வானில் அதிகளவில் தொழில் புரிவதாக தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டுறவு ஊழியருக்கு விசேட காபபுறுதித் திட்டம்

(கொழும்பு)
நாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கும் விசேட சாப்புறுதி திட்டம் ஒன்று விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி பிரேமதாசா கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கூட்டுறவுத்துறை ஊழியர் யாராவது விபத்தில் சிக்கினாலோ அல்லது நோய்வாய்ப்பட்டாலோ மேற்படி காப்புறுதி பணத்தை பயன்படுத்தலாம் எனவும் படிப்படியாக கூட்டுறவுத் துறை ஊழியரின் குடும்பங்களையும் இக்காப்புறுதித்திட்டத்தில் சேர்க்கும் வகையில் திட்டம் பரவலாக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

### தமிழக
[1ம் பக்கத் தொடர்ச்சி]
சட்டப் பேரவை நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை பிரசுரித்ததின் காரணமாக அவர் மீது உரிமை பிரச்னை எழுப்பப்பட்டு அவர் உரிமைக் குழுவின் ஆணைப்படி மன்னிப்பு கேட்காததால் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

திரு. செல்வம் தமக்கு எதிராக பேரவை செயலாளர் விடுத்த கைது வாறன்ட்டுக்கு தடை விதிக்கக்கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்சல் செய்திருந்தார். ஆனுல் அவரது மனுவை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. நிராகரிக்கப்பட்டது.

இதேவேளையில் இவரோடு சேர்த்து கைது வாறன்ட் பிறப்பிக்கப்பட்ட கோவை மாலைமுரசு ஆசிரியர் எஸ். கே. சுந்தர், பத்திரிகையாளர் எஸ். கே சுனில் ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது

இதனுல் உயர்நீதிமன்றத்துக்கும், தமிழ்நாடு சட்டப் பேரவைக்கும் இடையில் இழுபறிநிலை ஏற்பட்டிருப்பது (ச, ஜேர்ந்தே. கே

## அரசு ஊர்ஜிதம்

(கொழும்பு)
ஆனையிறவு இராணுவ முகாமை நோக்கி நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 8 படையினர் கொல்லப்பட்டதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### மண்ணையும்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி கூறினுர்

இவ்வைபவத்தில் விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரனி பாலசிங்கம், காவல்துறைப்பொறுப்பாளர் திரு நடேசன் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உட்பட விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் பலரும்கலந்து கொண்டனர்.

### ஆனையிறவில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைப்புலிகளினுல் இராணுவ முகாமை நோக்கி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன.

ஆர் பி. ஜிகள், எல். எம். ஜி ள் உட்பட பெருந்தொகையான நவீனரக ஆயுதங்கள் இத்தாக்குதலில் புலிகளால் மீட்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்: ஏ. கே. எல். எம். ஜி.-02, அதற்குரிய 15 ரவைக்கூடுகள் 2000 தொடர் ரவைகள், ஆர் பி ஜி -02. அதற்குரிய ஷெல்-13, புறப்ளர்-08, ரி. 56 ரக துப்பாக்கி 08, ரி. 56-02 03, ரி. 56 புது மொடல்-02, ரி. 56 பழைய மொடல்'01, ரி. 56-1 02, 40 எம். எம். பீஸ்டல்-01, அதற்குரிய ஷெல்கள்-14, சிக்னல் பிஸ்டல்-01, ஜே.ஆர். ரக கைக்குண்டுகள்-26. ரி-81 ரைபிள் கிரைனேட்-01, தொலைநோக்கி-01, நச்சுவாயுதடைக் கருவி-01, றம் மகசீன்-14, ரி. 56 மகசீன்-20, ரி. 81 மகசீன்-13, ஜி. 3 மகசீன்-01, 60 எம். எம். பரா ஷெல்-01. 60 எம். எம். ஷெல்-14. ரி 56 ரக துப்பாக்கிக்குரிய 22 ரவைக்கூடுகள், ரி 81 ரக துப்பாக்கிக்குரிய 13 ரவைக் கூடுகள், ஜி 3 ரக துப்பாக்கிக்குரியரவைகள்-11, 16,000 நடுத்தர ரவைகள், 17 ரவைக்கூடு தாங்கி அணிகள், 2000 ரவை இணைப்பிகள், 60 எம் எம். ஷெல் சாட்றச்-09, 60 எம் எம். பூஸ்டர்-20. பயனைட் கத்தி-02, ஏ.கே. கோல்சர்-5, ஏ. கே. எல். எம். ஜி. கோலசர்-12, ஐ. எம், ரவைகள் 15.049, நேட்டோ ரவைகள்-603, லிங்குகள்-2039, சப்பாத்து - 46 சோடி, தண்ணீர்கான்-14, கோசிரா-28, பெல்ட்-14, தொப்பி-06, றெயின்கோட்-13, புல்லட் புறுாவ் ஜக்செட்-03, செல்மட்-10, கிற்பாக்-25.
(ரி.56, 150)

## நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)
சைவப்புலவர் வித்துவான் வ. செல்லையா இயற்றிய சித்திரமேழி அருள்மிகு ஞானவைரவர் போற்றித் திருஅகவல்' நூல் அறிமுகவிழா இன்று செவ்வாய் இரவு 7-00 மணிக்கு சித்திரமேழி அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் வை ... ணம் தலைமையில் நடைபெறும் அறிமுகவிழாவில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். வைத்தியக் கலாநிதி சு இராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் பங்கு பற்றுகிறார். (சு)

### கொழும்பு
[1ம் பக்கத் தொடர்ச்சி]
பிரச்சினை காரணமாக எழுந்த மோசமான நிலைமையினுல் பல்கலைக்கழகத்தை சுமுகமாக நடத்தமுடியாது இருக்கின்றதென்று கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஈ எல். பீரிஸ் விடுத்த அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்

பல்கலைக்கழக வளவினுள் நேற்று மாலை 6 மணியிலிருந்து மாணவர்கள் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டது.

விடுதியிலுள்ள மாணவர்கள் அனைவரும் இன்று மாலை 4 மணிக்கு முன்பதாக விடுதிகளை விட்டு வெளியேறிவிட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (கே)

### முத்துகல
(1ம் பக்கத் தொடர்ச்சி)
வெட்டிக் கொலை செய்தனர்.

இங்கு நடைபெற்ற வன்செயலில் ஐந்து தமிழ்ப்பெண் பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளதுடன் ஆறு தமிழர் காணுமல் போயுள்ளனர். பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்த மூன்று தமிழ் பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டதுடன் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்த பலர் இரு பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## தானியச் செய்கையில் ஈடுபடுமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
தானியப் பயிர்ச்செய்கையில் யாழ். குடாவிவசாயிகளை ஈடுபடுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குடாநாட்டில் பரவலாகப் செய்யும் மழையை பயன்படுத்தி சிறுதானியச்செய்கையை அனைத்து விவசாயிகளும் மேற்கொள்ளவேண்டும் என்றும் தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது. (ரி)

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு தட்டுவன் கொட்டிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் சலீம் சாந் ன் கந்தையா - பாலசுப்பிரமணியம் - திருவையாறு கிளிநொச்சி. லக்சன் (ரவிசங்கர்-) மகாலிங்கம் வெளிமுகுந்தன், 6ம் வட்டாரம், திருமலை) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர். வி

### யாழ். ஆயர்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளையின் வெள்ளி-பொன்-விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய, பேருள் திரு நீக்கிலாஸ்மார்க்கஸ் பெர்ணுண்டோ தமிழில் உரைநிகழ்த்துகையில் மேலும் கூறியதாவது.

யாழ். ஆயர் தியோகுப்பிள்ளையின் இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் சகல மட்டங்களிலுமிருந்து ஆயர்களும், குருமாரும், அருட்சகோதரிகளும் இங்கு வந்துள்ளது; அவரின் தன்நலமற்ற சேவையை எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கை கத்தோலிக்க ஆயர் உயர் குழுவில் யாழ் ஆயர் மதிப்புடையவராகத் திகழ்ந்தவர். எமது உயர் பீடக்குழுக்கூட்டங்களில் சட்டப்பிரச்னைகள் எழும்போது யாழ் ஆயரே அப்பிரச்னைகளை மிக இலகுவாகத் தீர்த்துவைப்பார். அந்த அளவுக்கு அவர் ஒரு சட்டவல்லுநராகவும் சிறந்த கல்விமானுகவும் திகழ்கின்ருர் என்ருர்.

யாழ். மறைவட்ட குரு முதல்வர் வண. எஸ். ஏ. மைக்கல்சாமி தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பு வைபவத்தில் தென்னிந்திய திருச்சபை ஆயர் கலாநிதி டீ. ஜே. அம்பலவாணர், நல்லூர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, உட்பட மற்றைய மறைவட்ட பிரதிநிதிகளும் உரையாற்றினுர்கள்.

மேற்படி வைபவத்தை யொட்டி மும்மடி விழாசிறப்பு மலரை வண. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் வெளியிட்டு வைத்தார். விழாமுடிவில்வண. அன்ரன் இராஜநாயகம் அனைவருக்கும் நன்றி கூறினுர்.

கலை நிகழ்ச்சிகளுடன் முடிவடைந்த இவ்வைபவத்தில் ஆயிரக்கணக்கில் பொது மக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (வி)

## பொறியியலாளர் பரீட்சை

(கொழும்பு)
இலங்கைப் பொறியியலாளர் சேவையின் 2ம் பிரிவு 2ம் தரத்திற்கான பரீட்சை இம்மாதம் 30ம் திகதி நடைபெறும் என பொதுநிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் மேற்படி பரீட்சை நடைபெறவிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

## தெற்கில் மின்வெட்டுநீக்கம்

(கொழும்பு)
நாட்டின் தென்பகுதியில் கணிசமான மழை நேற்று பெய்ததனுலும், இன்று பரவலாக மழை பெய்யுமென வளிமண்டல திணைக்களம் அறிவித்துள்ளமையினுலும் மின்வெட்டு நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

மின் உற்பத்திக்கான நீரேந்து பகுதிகளிலும் மழை பெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (கே)

### கிரிக்கெட்
[3-ம் பக்கத் தொடர்ச்சி]
இதன் பின்பு துடுப்பெடுத்தாடிய இலங்கை 25 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 114 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. (வி)

### சிறுபான்மையினரின்
(1 ம் பக்கத் தொடர்ச்சி)
சகல இனமக்களும் இந்நாட்டில் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் வாழவேண்டுமென்ற நன்நோக்கிலேயே தான் ஆட்சிசெய்து வருவதாகவும் தெரிவித்தார். (க)

### பிரதேச ரீதியில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு உல்லாசப் பிரயாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமான் அண்மையில் நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தியா, சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகளில் எல்லாம் தமிழர்கள் பரவலாக வாழ்ந்துவருகிருர்கள் அவர்களோடு இணைந்து நாம் எமது கலை. கலாச்சாரங்கள் என்பவற்றை வளர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (க)

### பதற்றத்தை
(1ம் பக்கத் தொடர்ச்சி)
மத்திய சட்டமன்ற நீதித்துறை இணை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் நேற்று மாநிலங்கள் அவையில் தெரிவித்தார்.

பத்திரிகை ஆசிரியர்கள் நிருபர்கள் தொடர்பாக தமிழ்நாடு சட்டப்பேரவைக்கும் உயர்நீதிமன்றத்துக்கும் எழுந்துள்ள பிரச்னை குறித்து சில உறுப்பினர்கள் கேட்டகேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு உறுதிமொழி அளித்தார்.

இந்த பிரச்னைக்கு சுமுகமான தீர்வைக்காண்பதற்காக மத்திய அரசு அனைத்துக் கட்சிகளின் கூட்டமொன்றை கூட்டி ஆராயும் என்றும் இணையமைச்சர் மேலும் கூறினுர்- [கே]

தென்மராட்சி மக்களுக்கு
ஓர் நற்செய்தி
உங்களுக்கு தேவையான
றபர் முத்திரைகளை
(Rubber Stamp)
விரும்பிய டிசைன்களில் செய்துகொள்ள
இன்றே நாடுங்கள்;
சோதி அச்சகம்
முதலாம் மாடி
25, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.
(எ-2134)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/81